**தலைமை நீதித்துறை நடுவர்  நீதிமன்றம், புதுக்கோட்டை**

**முன்னிலை . திரு.K.S.பால்பாண்டியன்,  B.A., B.L.,**
**தலைமை குற்றவியல் நீதிபதி,  புதுக்கோட்டை**

**2026–ம் ஆண்டு ஜுன் திங்கள் 29ம் நாள் திங்கள்கிழமை**

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.145/2022

| வ.எண். | தலைப்புகள் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | புதுக்கோட்டை நகர காவல் நிலையம், குற்ற எண்.267/2022 |
| 2. | எதிரியின் பெயர் & முகவரி | **செந்தில்குமார்,**<br>த.பெ.வேலு,<br>எண். 931, பாலன் நகர்,<br>9ஏ, நத்தம்பண்ணை,<br>புதுக்கோட்டை. |
| 3. | சம்பவ தேதி | 27.06.2022 |
| 4. | புகார் அளித்த தேதி | 27.06.2022 |
| 5. | எதிரியிடம் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள். | 09.08.2023 |
| 6. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 16.06.2026 |
| 7. | விசாரணை துவங்கிய நாள் | 18.03.2024 |

| | | |
|---|---|---|
| 8. | விசாரணை முடிவுற்ற நாள் | 16.06.2026 |
| 9. | தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட நாள் | 29.06.2026 |

| **வ.எண்.** | **தலைப்புகள்** | **விவரங்கள்** |
|---|---|---|
| 1. | குற்றமுறையீட்டாளரின் பெயர்: | புதுக்கோட்டை நகர காவல் ஆய்வாளர், புதுக்கோட்டை. |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர்: | செந்தில்குமார் |
| 3. | எதிரியிடம் குற்றம் குறித்து எழுப்பப்பட்ட வினா: | எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 மற்றும் 304A–ன் கீழ் குற்றம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. |
| 4. | குற்றம் சாட்டப்பட்டவரின் பதில் : | குற்றத்தை மறுப்பதாகவும், தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்தார். |
| 5. | இந்நீதிமன்றத்தின் தீர்மானம்: | முடிவாக, இந்த வழக்கின் எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 மற்றும் 304A–ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 6. | தண்டனை அல்லது உத்தரவு | இல்லை. |

இவ்வழக்கானது புதுக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் இருந்து 05.03.2026 தேதியில் இந்நீதிமன்றத்திற்கு

மாறுதல் செய்யப்பட்டு 22.06.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்ததில் அரசு தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.B.சிவசங்கரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முகமது எர்ஷாத் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று வரை என் பரிசீலனையிலிருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆழ்ந்து வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கின் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 மற்றும் 304A-ன் படி குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2) **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>**

இந்த வழக்கின் புகார்தாரரான ராமையா என்பவரின் மகன் சிங்கப்பூரில் வேலை செய்து வருவதாகவும், மேற்படி புகார்தாரரின் மருமகள் இந்திரா என்பவர் புதுக்கோட்டை TVS கார்னர் அருகில் வாடகைக்கு வீடு எடுத்து குடியிருந்து வருவதாகவும், 27.06.2022 தேதியில் புகார்தாரரின் சொந்த ஊரான அம்மையாப்பட்டியில் அரங்குளவன் என்பவரின் இறப்பு காரியத்துக்கு மேற்படி இந்திரா அவருடைய இளைய மகனான பவின் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் வந்துவிட்டு மாலை சுமார் 05.20 மணியளவில் அம்மையாப்பட்டியிலிருந்து திரும்ப தன்னுடைய வீட்டிற்கு சென்றதாகவும், மேற்படி இந்திரா என்பவர் அவருக்கு சொந்தமான TN 55 BE 4134 என்ற பதிவெண் கொண்ட Yamaha Z-ray இருசக்கர வாகனத்தில் அவருடைய மகன் பவினை அவருக்கு முன்பாக நிறுத்தி வைத்துக்கொண்டு சென்றபோது

புதுக்கோட்டை–அரிமளம் ரோட்டில் SVS கல்லூரி அருகிலுள்ள வளைவில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது அதே ரோட்டில் மேற்படியாருக்கு எதிராக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி TN 34 D 3647என்ற பதிவெண் கொண்ட அம்மன் அருள் என்ற பெயருடைய லாரியை ஓட்டி வந்த எதிரி மேற்படி லாரியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஹாரன் எதுவும் அடிக்காமலும் ஓட்டிவந்து திடீரென வளைவில் வலது புறமாக திரும்பியபோது சாலையில் அவருக்கு இடதுபுறம் இருந்த இரும்பு சைடு கட்டையில் மோதி அருகிலிருந்த மின் கம்பத்தில் இடித்ததால் எதிரி அவர் ஓட்டி வந்த லாரியை திடீரென வலது புறமாக திருப்பியபோது அவரது கட்டுப்பாட்டை இழந்த லாரி எதிரே வந்த இந்திரா மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அதில் இந்திராவுக்கும் அவருடைய மகன் பவினுக்கும் பலத்த காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்ததாகவும், தகவல் கிடைத்து வந்த புகார்தாரர் சம்பவ இடத்தை பார்த்தபோது விபத்தை ஏற்படுத்திய லாரி சாலையின் ஓரத்தில் கவிழ்ந்து கிடந்ததாகவும், சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்திரா மாலை 06.50 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், விபத்தில் கொடுங்காயம் ஏற்பட்ட பவினுக்கு வலது காலில் எலும்பு உடைந்து தொடர்சிகிச்சை எடுத்து வந்ததாகவும், இது சம்பந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்க கேட்டு அ.சா.ஆ.1 புகார் அளித்ததாகவும், அதன்பேரில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், சாட்சிகளை விசாரித்ததிலிருந்தும், சான்றாவணங்களை பரிசீலித்ததிலிருந்தும் எதிரிதான் தாவா குற்றத்திற்கு காரணம் என்பதால் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 338 மற்றும் 304ஏ–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அரசுதரப்பு வழக்கு அமைந்துள்ளது.

3) புதுக்கோட்டை, நீதித்துறை நடுவர் எண்.1 அவர்கள் இவ்வழக்கின் கோப்புகளை ஆராய்ந்து ஆண்டு பட்டிகை வழக்கு எண்.145/2022 ஆக கோப்பிற்கு எடுத்து எதிரியை ஆஜராக உத்தரவிட்டு, எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு வழக்கு நகல்களை வழங்கிய நிலையில் மேற்படி வழக்கு புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதால் இவ்வழக்கினை கோப்புக்கு எடுத்து இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகியதில் வழக்கு ஆவணங்களின் நகல் அவருக்கு வழங்கப்பட்டு, வழக்கு குற்றத்தை எதிரி ஒத்துக்கொள்கிறாரா? என்று கேள்வி எழுப்பியதில் எதிரி வழக்கு குற்றத்தை மறுப்பதாகவும், வழக்கை மேல் விசாரணை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட காரணத்தால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா8 வரையிலான சாட்சிகளும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**</u>

**6.1) அ.சா.1.திரு.இராமையா,** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அம்மையார் பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருவதாகவும், கடந்த 27.06.2022 அன்று மாலை 05.00 மணிக்கு தான் அம்மையார்பட்டியில் இருந்த போது இரவி என்பவர் மாலை 06.00 மணிக்கு

போன் செய்து தனது மருமகள் இந்திரா மற்றும் தனது பேரன் பவினுக்கு அரிமளம் சாலையில் SVS கல்லூரி அருகே விபத்து ஏற்பட்டதாக கூறியதாகவும், தான் உடனடியாக சம்பவ இடம் சென்று பார்த்த போது தனது மருமகளுக்கு தலை மற்றும் காலில் அடிபட்டிருந்ததது என்றும், தனது பேரனுக்கு தலை மற்றும் தோள்பட்டை மற்றும் காலில் காயம் ஏற்பட்டிருந்தத என்றும், . 108 Ambulance ல் அவர்களை PMCH க்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு சென்ற சிறிது நேரத்தில் தனது மருமகள் உயிரிழந்து விட்டார் என்றும், தனது பேரனை அங்கிருந்து தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று அங்கு காலில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு செயற்கை உலோகம் வைக்கப்பட்டது என்றும், இது தொடர்பாக புகார் அளித்ததாகவும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், அம்மன் பெயர் கொண்ட லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக போலீசார் கூறியதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.2) அ.சா.2.திரு.ரவி,** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் PR புரத்தில் குடியிருந்து Real Estate தொழில் செய்து வருவதாகவும், கடந்த 27.06.2022 அன்று மாலை 05.00 மணிக்கு தானும் தனது நண்பர் சுதாகரன் என்பவரும் புதுக்கோட்டையில் இருந்து தனது வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்த போது தங்களுக்கு முன்னால் TN – 34 – D – 3647 என்கிற பதிவெண் கொண்ட அம்மன் அருள் என்ற பெயர் குறித்த லாரி ஒன்று தங்களுக்கு முன்னால் புதுக்கோட்டையில் இருந்து சென்றுக் கொண்டிருந்தது என்றும், திடீரென சாலையில் இடதுபுறம் இருந்த இரும்புக்கம்பி மீது மோதி லாரி திடீரென திசை மாறி எதிரே வந்துக் கொண்டிருந்த Yemaga இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் இருசக்கரவாகனத்தில் வந்த பெண்மணி மற்றும்

ஒரு குழந்தை மீது விபத்து ஏற்பட்டதாகவும், இதில் அந்த பெண்மணிக்கு நெற்றி மற்றும் தலையில் பின்புறம். வலது தொடை ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும், அந்த குழந்தைக்கு கை மற்றும் தலையில் அடிபட்டிருந்தது என்றும், தன்னுடன் வந்த சுதாகரன் என்பவர் அந்த பெண்மணியை தெரியும் எனக்கூறி அவருடைய வீட்டிற்கு தகவல் தெரிவித்து அந்த பெண்மணியின் மாமனார் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றும், விபத்தில் காயம் அடைந்தவர்களை அவசர ஊர்தி மூலம் PMCH க்கு அனுப்பி வைத்ததாகவும், மாலை தான் மருத்துவமனை சென்ற போது அந்த பெண்மணி இறந்து விட்டதாகக் கூறியதாகவும், லாரியை ஓட்டி வந்த ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.3) அ.சா.3.திரு.சுதாகர்,** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அம்மையார்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருவதாகவும், கடந்த 27.06.2022 அன்று மாலை 05.00 மணிக்கு தானும் தனது நண்பர் ரவி என்பவரும் புதுக்கோட்டையில் இருந்து தனது வீட்டிற்குச் சென்றுக்கொண்டிருந்த போது தங்களுக்கு முன்னால் TN 34 D 3647 என்கிற பதிவெண் கொண்ட அம்மன் அருள் என்ற பெயர் குறித்த லாரி ஒன்று தங்களுக்கு முன்னால் புதுக்கோட்டையில் இருந்து சென்றுக் கொண்டிருந்தது என்றும், திடீரென சாலையில் இடதுபுறம் இருந்த இரும்புக்கம்பி மீது மோதி லாரி திடீரென திசை மாறி எதிரே வந்துக் கொண்டிருந்த Yemaha இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் இருசக்கரவாகனத்தில் வந்த பெண்மணி மற்றும் ஒரு குழந்தை மீது விபத்து ஏற்பட்டது என்றும், இதில் அந்த பெண்மணிக்கு நெற்றி மற்றும் தலையில் பின்புறம். வலது தொடை ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றும், அந்த குழந்தைக்கு கை மற்றும் தலையில் அடிபட்டிருந்தது என்றும், விபத்தில்

அடிபட்ட பெண்மணி தனக்கு தெரிந்தவர் என்பதால் அவருடைய வீட்டிற்கு தகவல் தெரிவித்து அந்த பெண்மணியின் மாமனார் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், விபத்தில் காயம் அடைந்தவர்களை அவசர ஊர்தி மூலம் PMCH க்கு அனுப்பி வைத்ததாகவும், மாலை தான் மருத்துவமனை சென்ற போது அந்த பெண்மணி இறந்து விட்டதாகக் கூறியதாகவும், லாரியை ஓட்டி வந்த ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.4) அ.சா.4.திரு.வெற்றிச்செல்வம்,** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அம்மையார்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருவதாகவும், கடந்த 27.06.2022 அன்று தனது தம்பி மனைவி இந்திரா மற்றும் தனது தம்பியின் மகன் பவினுக்கு SVS கல்லூரி அருகே விபத்து நடந்ததாக தனக்கு தகவல் கிடைத்ததாகவும், தான் சம்பவ இடத்திற்கு சென்று விபத்தில் காயமடைந்தவர்களை அவசர ஊர்தி மூலம் PMCH க்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு இந்திரா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாகவும், பவினை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று அறுவைசிகிச்சை செய்யப்பட்டது என்றும், போலிசார் பிரேத விசாரணை செய்த போது தான் சாட்சியாக உடனிருந்து தனது தம்பியின் மனைவி உடலை அடையாளம் காட்டியதாகவும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.5) அ.சா.6.திரு.குருநாதன்,** தனது சாட்சியத்தில், தான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் கடந்த 27.06.2022ம் தேதி புதுக்கோட்டை நகர காவல் நிலைய

ஆய்வாளராக இருந்த போது அன்றைய தினம் உதவி ஆய்வாளர் ராஜகோபால் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது புகார்தாரர் ராமையா என்பவர் கொடுத்த புகாரை பெற்றதாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும், உதவி ஆய்வாளர் 28.06.2022 காலை 07.00 மணிக்கு சாட்சிகளின் முன்னிலையில் பார்வை மகசர் அ.சா,ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும் குறியிடு செய்ததாகவும், சாட்சிகளின் முன்னிலையில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அன்றைய தினம் காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை PMCH மருத்துவமனையில் வைத்து இறந்த இந்திரா என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ–6 ஆகவும் குறியிடு செய்யப்பட்டது எனவும் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பிரேத விசாரணைக்காக பெண் தலைமைக் காவலர் 305 திருமதி.லதா என்பவரை நியமித்து வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தாகவும், அன்றைய தினம் இரவு 19.00 மணிக்கு இந்த வழக்கின் எதிரி செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜரானவரை கைது செய்து இரு நபர் ஜாமீனில் விடுவித்தாகவும், 29.06.2022ம் தேதி லாரியின் உரிமையாளர் ராஜப்பன் என்பவரை விசாரித்து வாகனத்தின் ஆவணங்களை பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் 04.07.2022ம் தேதி விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களான TN –55– BE 4134 என்ற இரு சக்கர வாகனத்தையும் TN 34 D 3647 என்ற லாரியையும் வேண்டுகோள் கடிதத்துடன் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், 15.07.2022ம் தேதி வழக்கினை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்த போது உதவி ஆய்வாளரிடம் கூறியதையே தன்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஜெய்சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து

மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றதாகவும் TN 55 BE 4134 என்ற இரு சக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TN 34 D 3647 என்ற லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டதாகவும், உதவி மின் பொறியாளர் கருப்பையா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இந்திராவின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.9 ஆகவும், பவினின் PMCH ஆல் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.10 ஆகவும், பவினின் காயச்சான்று அ.சா.ஆ.11 என்றும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.12 என்றும், சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை அ.சா.ஆ.13 என்றும், விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.6) அ.சா.7.திரு.கனகராஜ்,** தனது சாட்சியத்தில், தான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அம்மையாபட்டியில் குடியிருந்து வருவதாகவும், 27.06.2022 தேதியில் மாலை சுமார் 6.30 மணியளவில் இந்திராணி, மற்றும் பிரவீன் ஆகியோர் மீது லாரி மோதியதில் அவர்களுக்கு காயம் எற்பட்டு இந்திராணி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், அவருடைய பிரேதத்தின் மீது புதுக்கோட்டை நகர காவல் நிலைய போலிசார் பிரேத விசாரணை மேற்கொண்டனர் என்றும், அந்த சமயத்தில் தான் பாண்டியன் மற்றும் சில நபர்கள் முன்னிலையில் போலிசார் பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.7) அ.சா.8.திரு.ஜெயந்த்,** தனது சாட்சியத்தில், தான்தற்போது மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவ பிரிவில் உதவி

பேராசிரியராக பணிபுரிந்து வருவதாகவும், தான் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் கடந்த 27.06.2022 தேதியில் மாலை சுமார் 6.20 மணிக்கு தான்பணியில் இருந்தபோது 30 வயதுமிக்க பெண் இந்திரா, க.பெ.பழனியப்பன் என்பவரை அவரது உறவினர் தினகரன் என்பவர் சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்ததாகவும், அவரை விசாரித்தபோது அதே தினம் மாலை 6.00 மணியளவில் SVS கல்லூரி அருகே இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது 4 சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னதாகவும், காயம்பட்ட இந்திராவை பரிசோதனை செய்து பார்த்ததில் அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றும், அவருக்கு வலதுகால்தொடை, வலது கணுக்கால் மற்றும் முன்பக்கதலையில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், வலதுகால் தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்றும், அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், தான் விபத்து பதிவேடு பதிவு செய்ததாகவும், அன்றைய தினம் அதே விபத்தில் காயமடைந்த 8 வயதுடைய பவின் த.பெ.பழனியப்பன் என்ற சிறுவனை அவருடைய உறவினர் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவருக்கு வலது பக்க தலை, வலது கால் ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது என்றும், அவர் சுயநினைவுடன் இருந்ததாகவும், அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்ததாகவும், அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்ததாகவும், அதன்பிறகு மாலை 6.55 மணியளவில் சிகிச்சைக்கு சேர்த்த இந்திரா சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டதாகவும், அவரது பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313—ன் படி எதிரியிடம் கேள்வி எழுப்பியதில் அவைகள் பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும் எடுத்துரைத்ததால் எதிரி தரப்பு சாட்சியத்திற்கு கால அவகாசம் வழங்கிய நிலையில் எதிரி தரப்பில் யாரும் சாட்சிகளாக விசாரித்துக்கொள்ளப்படாததால் எதிரி தரப்பு சாட்சியம் இல்லை என்று முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**8) இந்நிலையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்.**

எதிரியின் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 338 மற்றும் 304A—ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

9) **<u>தீர்வு.</u>**

இந்த வழக்கில் அ.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள புகார்தாரர் ராமையா என்பவர் இறந்துபோன இந்திராவின் மாமனார் ஆவார். அ.சா.1 சாட்சி விபத்து சம்பவத்தை நேரில் பார்த்திருக்கவில்லை. மாறாக, விபத்து குறித்து அ.சா.2 சாட்சி சொன்ன தகவலின்பேரில்தான் விபத்து பற்றி தெரிந்துகொண்டதாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 சாட்சி அவருடைய போலீஸ் விசாரணையின்போது சம்பவ சமயத்தில் எதிரி அவர் ஓட்டி வந்த லாரி வாகனத்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் எதுவும் அடிக்காமலும் ஓட்டி வந்து திடீரென வளைவில் வலதுபுறமாக திரும்பியபோது சாலையில் அவருக்கு இடதுபுறம் இருந்த இரும்பு சைடு கட்டையில் மோதி அருகில் இருந்த மின்கம்பத்தில் இடித்ததால் அவரது கட்டுப்பாட்டை இழந்த லாரி எதிரே வந்த அ.சா.1ன்

மருமகளான இந்திரா மீது மோதிவிட்டதாக சாட்சி ரவி என்பவர் மூலம் தகவல் தெரிந்துகொண்டதாக கூறியிருந்தபோதிலும், அ.சா.1 சாட்சி அவருடைய நீதிமன்ற முதல் விசாரணையின் எந்தவொரு இடத்திலும் சம்பவ சமயத்தில் எதிரி அவர் ஓட்டி வந்த லாரியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டி வந்து இந்திரா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய விபரத்தை தான் தெரிந்துகொண்டதாக சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதனால் அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தின்மூலம் அரசுதரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை.

**10)** விபத்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீஸ் விசாரணையின்போது வாக்குமூலம் அளித்துள்ள அ.சா.2 சாட்சி தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின் எந்தவொரு இடத்திலும் எதிரி அவர் ஓட்டி வந்த லாரியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாகவோ அல்லது லாரி ஓட்டுநரின் முழுமையான கவனக்குறைவு காரணமாகவே தாவா விபத்து ஏற்பட்டதாகவோ விபத்து சம்பவத்தை முழுமையாக விளக்கிக்கூறி சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதற்கும்மேலாக, அ.சா.2 சாட்சி தம்முடைய நீதிமன்ற குறுக்கு விசாரணையின்போது விபத்தை அவர் நேரடியாக பார்க்கவில்லை என்றும், சம்பவம் குறித்து கேள்விபட்டு தான் அங்கு போய் பார்த்ததாகவும், அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

**11)** மற்றொரு சம்பவ இட சாட்சியான அ.சா.3 சாட்சியும் தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது எதிரி அவர் ஓட்டி வந்த லாரியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாகவோ அல்லது லாரி ஓட்டுநரின் முழுமையான கவனக்குறைவு

காரணமாகவே தாவா விபத்து ஏற்பட்டதாகவோ விபத்து சம்பவத்தை முழுமையாக விளக்கிக்கூறி சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதற்கும்மேலாக, அ.சா.3 சாட்சி தம்முடைய நீதிமன்ற குறுக்கு விசாரணையின்போது விபத்தை அவர் நேரடியாக பார்க்கவில்லை என்றும், சம்பவம் குறித்து கேள்விபட்டு தான் அங்கு போய் பார்த்ததாகவும், அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அனைத்திற்கும்மேலாக, எதிரி அவர் ஓட்டி வந்த லாரியை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாகவோ அல்லது லாரி ஓட்டுநரின் முழுமையான கவனக்குறைவு காரணமாகவே தாவா விபத்து ஏற்பட்டதாகவோ விபத்து சம்பவத்தை முழுமையாக விளக்கிக்கூறி சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அ.சா.2 சாட்சியும் தம்முடைய நீதிமன்ற குறுக்கு விசாரணையின்போது விபத்தை அவர் நேரடியாக பார்க்கவில்லை என்றும், சம்பவம் குறித்து கேள்விபட்டு தான் அங்கு போய் பார்த்ததாகவும், அரசுதரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் சம்பவம் பற்றி கேள்விபட்டு நேரடியாக மருத்துவமனை சென்று பார்த்ததாக சாட்சியமளித்து விபத்து குறித்து போலீசார் அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பதுபோல் சாட்சியமளித்துள்ளார். அதனால், சம்பவ இட சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் மூலமாகவும் அரசுதரப்பு வழக்கு மெய்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**12)** இந்த வழக்கில் அ.சா.4 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள வெற்றிச்செல்வம் என்பவரும் விபத்து சம்பவம் குறித்து கேள்விபட்ட சாட்சியாகவே இருந்து காணப்படுகிறார். அ.சா.4 சாட்சியும் தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது சம்பவ சமயத்தில் எதிரியின் அதிகவேகமான மற்றும் அஜாக்கிரதையான வாகன ஓட்டுதலின் காரணமாகவே தாவா விபத்து ஏற்பட்டு

அதில் காயமடைந்த இந்திரா இறந்துவிட்டதாகவோ, பவின் என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டதாகவோ சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. அதனால், அ.சா.4 சாட்சியின் மூலமாகவும், விபத்து சம்பவமானது அரசுதரப்பில் தெளிவாக நிரூபிக்கப்பட்டிருக்கவில்லை.

**13)** இந்த வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.5 சாட்சி தம்முடைய நீதிமன்ற முதல் விசாரணையின்போது சம்பவம் நடைபெற்ற 3 நாட்கள் கழித்து பார்வைமகஜர் ஆவணத்தில் தம்மிடம் போலீசார் மருத்துவமனையில் வைத்து கையெழுத்து பெற்றதாகவே சாட்சியமளித்துள்ளார். அதனால், அரசுதரப்பில் அ.சா.5 சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது போலீசார் சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்து அ.சா.5 சாட்சியும் கையெழுத்து பெற்றதாக அவர் சாட்சியமளித்திருந்தபோதிலும், அ.சா.5 சாட்சியின் சாட்சியம் மட்டுமே அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்கான போதிய சாட்சியமாக இருந்து காணப்படவில்லை. அதுதவிர்த்து, மற்ற தனிநபர் சாட்சிகளும் அரசுதரப்பு வழக்கை ஆதரிப்பதாக சாட்சியம் அளித்திருக்கவில்லை.

**14)** விபத்திற்கு பிறகு, காயம்பட்ட இருநபர்களையும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது தாவா விபத்து நடைபெற்ற விதம் குறித்து விபத்துபதிவேட்டில் குறிப்பிடும்போது இரண்டு இருசக்கரவாகனம் மோதியதில் தான் விபத்து ஏற்பட்டதாக முதலில் குறிப்பிட்டுவிட்டு அதன்பின்னர் ஒரு இருசக்கர வாகனம் என்று எழுதப்பட்டதை அடித்து திருத்தம் செய்து நான்கு சக்கர வாகனம் என்று எழுதப்பட்டுள்ளது குறித்து எதிரி தரப்பில் அ.சா.8 சாட்சியிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தபோதிலும் அதுகுறித்து அரசுதரப்பில் எந்தவொரு விளக்கமும்

அளிக்கப்பட்டிருக்கவில்லை.

**15)** இந்த வழக்கில் எதிரி ஓட்டிச்சென்ற லாரி வாகனம் எதிரே வந்த இருசக்கர வாகனத்துடன் விபத்தை ஏற்படுத்திவிட்டு சற்றுதுாரத்தில் கவிழ்ந்துகிடந்ததாக அரசுதரப்பு வழக்கு அமைந்திருந்தபோதிலும் மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்று லாரி வாகனத்தின் டயர் மார்க் எதையும் பதிவு செய்யவில்லை. அவ்வாறான சங்கதியானது, அரசுதரப்பு வழக்கை மிகவும் பலவீனமாக கருதவே வாய்ப்புள்ளது.

**16)** நமது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமானது, B.Karthik Vs State by Inspector of Police, Coonoor Town Police Station, The Nilgiris District என்ற முன்தீர்ப்பு வழக்கில், ஒரு விபத்து வழக்கானது எதிரியின் அதிகவேகமான மற்றும் அஜாக்கிரதையான செயலினால் விபத்தை ஏற்படுத்தியதற்காக தண்டனை வழங்கப்படுவதாக இருக்கும்போது பின்வரும் 3 நிபந்தனைகள் பொருந்தி வரவேண்டுமென்று எடுத்துரைக்கின்றது. அதன்படி,

1) All the circumstances, including the objective circumstances constituting the accident, from which the inference of guilt is to be drawn, must be firmly established.

2) Those circumstances must be determinative tendency pointing unerringly towards the guilt of the accused, and

3) The circumstances should make the chain so complete that they cannot reasonable raise any other hypothesis save that of the accused's guilt.

என்று எடுத்துரைத்துள்ளதை கவனமாக பரிசீலிக்கும்போது கையிலுள்ள இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியமளித்துள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் எதிரியின் அதிகவேகமான மற்றும் அஜாக்கிரதையான செயலினால் தான் விபத்து ஏற்பட்டு அந்த விபத்தின் காரணமாக இந்திரா

என்பவருக்கு ஏற்பட்ட கொடுமையான காயங்களினால் அவர் இறந்துவிட்டார் என்றும், பவின் என்பவருக்கு கொடுமையான காயம் ஏற்பட்டது என்றும், சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை. மேற்படியார்களின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கை கூடுமானவரையில் தொடர்புபடுத்துவதாகவும் அமைந்திருக்கவில்லை. அரசுதரப்பு சாட்சிகளில் எவரும் இந்த வழக்கின் எதிரி, அதிகவேகமாகவும் மற்றும் அஜாக்கிரதையாகவும் செயல்பட்டு விபத்தை ஏற்படுத்தியதாகவும் சாட்சியம் எதுவும் அளித்திருக்கவில்லை.

**17)** நமது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மேற்படி முன்தீர்ப்பு வழக்கில்,

For the points that mere high speed does not bespeak of either negligence or rashness. Criminality is not to be presumed. No presumption of rashness or negligence could be drawn by invoking the maxim "res ipsa loquitur". The recording of the Tyre marks is an important factor in a case of road accident. To fasten Criminal Liability U/s.304-A, I.P.C., it is necessary that death should have been direct result of rash an negligent act of the Accused and that act must be proximate and imminent cause without the intervention of another's negligence. It must be the cause  auctions. Sofas as the Witnesses deposing as having seen the occurrence in question are concern, their evidence, has always to be carefully scrutinized because such Witnesses only observe accidents after their attention of accident is drawn to the impact, resulting from the collision. Their statement about the events immediately preceding the occurrence are generally and to very large extent influenced by what they imagine must have happened and not the real fact.

என்று எடுத்துரைத்துள்ளதை கவனமாக பரிசீலிக்கும்போது விபத்து வழக்குகளில் குற்றத்தின் பொறுப்பு குறித்து நிர்ணயிக்கும்போது சாட்சிகளின் சாட்சியங்களை கவனமாக அணுகவேண்டுமென்றும் வாகனம் வேகமாக வந்து

விபத்தை ஏற்படுத்தியது என்ற சங்கதி மட்டுமே அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தியதாக கருத இயலாது என்றும், விபத்து நடந்த இடத்தில் விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் டயர் மார்க்கை பதிவு செய்வது என்பது முக்கியமாக கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய காரணி என்றும், அதிகவேகமான மற்றும் அஜாக்கிரதையான வாகன ஓட்டுதலின் நேரடி செயலினால் பாதிக்கப்பட்ட நபருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்ள வேண்டியதும் அவசியம் என்றும் கருத்து தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது. ஆனால், கையிலுள்ள இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் லாரிவாகன ஓட்டுநரின் அதிகவேகமான மற்றும் அஜாக்கிரதையான வாகன ஓட்டுதலினால் தாவா விபத்து ஏற்பட்டுள்ளதாக அரசுதரப்பில் போதுமான அளவில் நிரூபிக்க இயலவில்லை. அதேபோல், மோட்டார் வாகன ஆய்வாளர் சம்பவ இடம் சென்று விபத்தில் ஈடுபட்ட வாகனங்களை ஆய்வு செய்ததாகவோ அதன் டயர் மார்க்குகளை பதிவு செய்ததாகவோ தெரியவரவில்லை. அதற்குமேலும், மோட்டார் வாகன ஆய்வாளர் இந்த வழக்கில் ஒரு சாட்சியாகவே விசாரிக்கப்பட்டிருக்கவில்லை. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றவருக்கு ஓட்டுநர் உரிமம் நடைமுறையில் இருந்ததா என்பதையும் அரசுதரப்பில் எடுத்துரைத்திருக்கவில்லை. மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் தாவா விபத்துக்கு எதிரியின் அதிகவேகமான மற்றும் அஜாக்கிரதையான வாகன ஓட்டுதல் தான் காரணம் என்பதை அரசுதரப்பில் போதுமான அளவில் நிரூபிக்க முன்வந்திருக்காத காரணத்தினால் அரசுதரப்பில் எடுத்துரைத்திருப்பதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை என்று கருதி எதிரியை வழக்கு குற்றசாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18)** அரசு தரப்பு சாட்சிய, சான்றவாணங்கள் மூலம் எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 மற்றும் 304A–ன் படியான குற்றங்கள் அரசுதரப்பில் போதிய அளவில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் எதிரியை மேற்படி குற்றத்திற்காக தண்டிக்க இயலாது என்பதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**19)** ஆகவே இதன் முடிவில், இந்த வழக்கின் எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 மற்றும் 304A–ன் கீழான குற்றச்சாட்டுகளைப் பொறுத்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 29ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

K S PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.06.29 18:52:26 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**
**புதுக்கோட்டை.**

**அரசு தரப்பு சாட்சிகள்.**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு.இராமையா |
| அ.சா.2. | திரு.ரவி |
| அ.சா.3. | திரு.சுதாகர் |
| அ.சா.4. | திரு.வெற்றிசெல்வம் |
| அ.சா.5. | திரு.பழனியப்பன் |
| அ.சா.6. | திரு.குருநாதன் |
| அ.சா.7. | திரு.கனகராஜ் |
| அ.சா.8 | திரு.ஜெயந்த் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்.</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரிலுள்ள இரண்டாம் கையெழுத்து |
| அ.சா.ஆ.3. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4. | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5. | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.7 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (நான்கு சக்கர வாகனம்) |
| அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (இருசக்கர வாகனம்) |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடு (இந்திரா) |
| அ.சா.ஆ.10 | விபத்து பதிவேடு (பவின்) |
| அ.சா.ஆ.11 | காயச்சான்று |
| அ.சா.ஆ.12 | சடலக்கூராய்வு அறிக்கை |
| அ.சா.ஆ.13 | சட்டப்பிரிவு மாற்றுதல் அறிக்கை |

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்.</u>**

இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u>**

இல்லை.

K S PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.06.29 18:52:33 +0530

**தலைமை குற்றவியல் நீதிபதி,**
**புதுக்கோட்டை.**